தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1975 அக்டோபர் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) நீத்தார் நினைவுக்குறிப்பு

முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஓ. சீனுவாச ரெட்டியார், ஓ. வெங்கடசுப்பா ரெட்டி, எம். பி. பெரியசாமி, அய்யனார், பி. வெங்கடாசல தேவர், எம். இராமச்சந்திர ரெட்டியார் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரை உத்திரமேரூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஓ. சீனுவாச ரெட்டியார் அவர்கள் 10—5—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரையிலும் மதுராந்தகம் தொகுதியிலிருந்தும், பின் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரையிலும் அச்சரப்பாக்கம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஓ. வெங்கடசுப்பா ரெட்டி அவர்கள் 25—9—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1937-ஆம் ஆண்டிலிருந்து 1939-ஆம் ஆண்டு வரையிலும், பின் 1946-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரையிலும் நாமக்கல் ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எம். பி. பெரியசாமி அவர்கள் 10—10—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டுவரை நிலக்கோட்டை ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. அய்யனார் அவர்கள் 13—10—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

[பேரவைத் தலைவர்] [1975 அக்டோபர் 23

1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டுவரை வேதாரண்யம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. பி. வெங்கடாசல தேவர் அவர்கள் 16—10—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை வந்தவாசி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எம். இராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் 18—10—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) இரங்கல் தீர்மானம்

சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், சட்டமன்ற மேலவையின் முன்னாள் தலைவராகவும் இருந்த திரு. ஆர். பி. இராமகிருஷ்ண ராஜு அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *" 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டுவரை புத்தூர் மற்றும் திருத்தணி வட்டத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகவும், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை தமிழ் நாடு சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் இருந்த திரு. ஆர். பி. இராமகிருஷ்ண ராஜு அவர்கள் 17—5—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இந்தப் பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்குத் தனது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது "*

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.